# திருப்பூர் மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறைகள்

**முன்னிலை : திரு. பவன்குமார் ஜி.கிரியப்பனவர், இ.ஆ.ப.,**

**ந.க.எண். இ1/7641/2023/ம3** **நாள். .04.2024**

பொருள் : மனைப்பிரிவு அனுமதி – திருப்பூர் மாநகராட்சி – மண்டலம் எண்.3–வார்டு எண். 47–நல்லூர் கிராமம்–க.ச.எண். 506/1A2Aல் 2.35 ஏக்கர் (அ) 9517.00 ச.மீ. பரப்பளவு – புதிதாக உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க ஒப்புதல் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை :
1) அரசாணை எண். 181 வீட்டு வசதி மற்றும் நகர் புற வளர்ச்சித் துறை, நாள். 09.12.2020
2) அரசாணை எண். 141 வீட்டு வசதி மற்றும் நகர் புற வளர்ச்சித் துறை, நாள். 16.07.2022
3) நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களது 20.10.2022–ந் தேதிய ந.க.எண். 12843/டி.பி–2 எண்ணிட்ட சுற்றறிக்கை.
4) நகர் ஊரமைப்பு இணை இயக்குநர் (பொ), மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருப்பூர் அவர்களின் கடிதம் ந.க.எண். 6RII3N6Z/2022/TCP நாள். 23.03.2023
5) திரு.ஏ.சண்முகம் மற்றும் 3 நபர்கள் திருப்பூர் ஆகியோர்களின் கடிதம் நாள். 07.11.2023
6) திருப்பூர் மாநகராட்சி மாமன்ற தீர்மான எண்.764 நாள். 23.02.2024

*****

**<u>உத்தரவு</u>**

திருப்பூர் மாநகராட்சி, மண்டலம் எண். 3, வார்டு எண்.47, நல்லூர் கிராமம், க.ச.எண். 506/1A2A–ல் 2.35 ஏக்கர் (அ) 9517.00 ச.மீ. நிலப்பரப்பில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க திரு.ஏ.சண்முகம் மற்றும் 3 நபர்கள் விண்ணப்பம் செய்ததில், உறுப்பினர் செயலர்(பொ), திருப்பூர் உள்ளூர் திட்டக் குழுமம் மற்றும் மாவட்ட நகர் ஊரமைப்பு இணை இயக்குநர், திருப்பூர் மண்டலம் அவர்களின் 23.03.2023–ந் தேதிய ந.க.எண். 6RII3N6Z/2022/TCP எண்ணிட்ட செயல்முறை ஆணையில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு திட்ட அனுமதி எண். 20/2023, மனைப்பிரிவு வரைபட அனுமதி மவ/ந.ஊ.(திமா)/தி.உ.தி.கு.எண். 20/2023–ன் படி தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், மனைப்பிரிவு சாலைகள் மற்றும் மூலை முடக்குகள் பரப்பளவு 2842.45 ச.மீ, சாலைகள் மற்றும் பொது உபயோகம் 231.15 ச.மீ (2487.17 ச.அடி), உள்ளாட்சிக்கு ஒதுக்கீடு 38.58 ச.மீ (415.27 ச.அடி), பூங்கா ஒதுக்கீடு 644.34 ச.மீ (6933.09 ச.அடி) மற்றும் TANGEDCO உள்ள இடம் 50.675 ச.மீ (545.26 ச.அடி) முதலியவற்றை தான சாசனப் பத்திரம் எண்.1335/2023 நாள்.16.03.2023ன் படி மாநகராட்சி பராமரிப்பிற்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

மேலும், பார்வை 3ல் கண்டுள்ள சுற்றறிக்கை வழிகாட்டு நெறிமுறை வரிசை எண்.10ன்படி, மனைப்பிரிவு சாலைகள், சிறுபாலம், மழைநீர் வடிகால் மற்றும் குடிநீர் வசதி போன்றவற்றினை உரிய முறையில் அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி மனைப்பிரிவில் 12 தெருவிளக்குகள் அமைக்க தலா ரூ.35,000/– வீதம், ரூ.4,20,000/– மாநகராட்சி செலுத்துசீட்டு எண்.032/501/23–24/0002628, நாள்.07.12.2023, மனைப்பிரிவு உரிமக் கட்டணம் ரூ.20,000/– செலுத்துச்சீட்டு எண்.032/501/5/23–24/0002630 நாள்.07.12.2023–ன்படியும் மற்றும் மனைப் பிரிவு வைப்புத் தொகை ரூ.3,00,000/– செலுத்துச்சீட்டு எண்.032/501/5/23–24/0002629 நாள்.07.12.2023ன் படியும், செலுத்தப்பட்டுள்ளது.

எனவே, பார்வை 6ல் காணும் இம்மாநகராட்சி மாமன்ற தீர்மான எண். 764 நாள்.23.02.2023-ன்படி இத்துடன் இணைக்கப்பட்டுள்ள குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடம் எண்.ம.வ./ந.ஊ.(தி.மா)/திஉதிகு எண்.20/2023–ன்படியும், பார்வை 2ல் தெரிவித்துள்ள நிபந்தனைகளின்படியும், குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க அனுமதி வழங்கப்படுகிறது.

**<u>இணைப்பு –</u>**

1) மனைப்பிரிவு வரைபட எண்.ம.வ./ந.ஊ.(தி.மா)/திஉதிகு எண்.20/2023–ன் நகல்
2) மனைப்பிரிவு நிபந்தனைகள்

8/4/24

ஆணையாளர்,
திருப்பூர் மாநகராட்சி.

16.4.24

பெறுநர்
திரு.ஏ.சண்முகம் மற்றும் 3 நபர்கள்
13-5, சேரன்நகர்,
ராக்கியாபாளையம்,
நல்லூர்,
திருப்பூர்.

நகல்
1) உதவி ஆணையர் (பொ), மண்டலம் எண்.3,
2) உதவி பொறியர் (நகரமைப்பு), மண்டலம் எண்.3,
3) இ பிரிவு எழுத்தர், அசையா சொத்து பதிவேட்டில் பதிவு செய்ய
4) வருவாய் ஆய்வர் (பொ), மண்டலம் எண்.3, காலியிட வரிவிதிப்பு செய்ய,
5) சார் பதிவாளர், நல்லூர், திருப்பூர் – பத்திரபதிவு செய்ய தடையின்மை சான்று வழங்கப்படுகிறது.
6) இருப்பு கோப்பு.

நகல் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது
1) ஆணையர் அவர்களின் மேசைக்கு,
2) மாண்புமிகு மேயர், திருப்பூர் மாநகராட்சி அவர்களின் பார்வைக்கு.

**இ1/7641/2023/ம3**
**மனைப்பிரிவு எண்.**
**ம.வ./ந.ஊ.(தி.மா)/ திஉ திகு எண்.20/2023**

## மனைப்பிரிவு நிபந்தனைகள்

1) தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் திட்ட விதிகள், 2019 இல் மனைப்பிரிவிற்காக விதிக்கப்பட்டுள்ள அனைத்து விதிகளும் இம்மனைப்பிரிவிற்குப் பொருந்தும். எனவே, பொருத்தமான விதிகள் அனைத்தும் பின்பற்றப்படவேண்டும்.
2) திருப்பூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள், சாலைகளின் அமைப்புகள், அளவுகள், பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மற்றும் மனையை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும் நகர் ஊரமைப்புத் துறையின் முன் ஒப்புதலின்றி செய்தல் கூடாது.
3) இரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு (SPLAY) அமைக்கப்படவேண்டும்.
4) மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு முன்பு எந்த ஒரு மனையையும் விற்கவோ, குத்தகைக்கு விடவோ வேறு எந்த விதத்திலும் பரிமாற்றம் செய்யவோ அல்லது எந்த ஒரு மனையிலும் கட்டிடம் கட்டவோ கூடாது.
5) அங்கீகரிக்கப்பட்டுள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையையும் பொது காரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகள் தவிர மற்ற மனைகளை குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்தப்படவேண்டும். மேலும், மனை உபயோகம் மாற்றம் கோரும் இடங்களில் மட்டுமே Tamil Nadu Combined Development Building Rule 2019ல் குறிப்பிட்டுள்ள Residential Use-ல் குறிப்பிடப்பட்டுள்ளவைகளுக்கு மட்டுமே நகர் ஊரமைப்பு துறையின் முன் அனுமதி பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் அனுமதிக்கப்படவேண்டும்.
6) மனைப்பிரிவின் ஊடே குறைந்த அழுத்த, உயர் அழுத்த மின் கம்பிப் பாதை, தந்திக் கம்பி பாதை அமைந்தால், கம்பிப் பாதையை சாலையின் விளிம்பிற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவின் வரைபடத்தில் காண்பித்துள்ளவாறோ மாற்றி அமைக்க வேண்டும்.
7) மனைப்பிரிவு பள்ளமாக உள்ள பகுதியை தெரு மட்டத்திற்கு உயர்த்தப்படவேண்டும்.
8) 7.2 மீட்டர் அகலத்திற்கு அதிகமாக உள்ள எல்லா தெருக்களிலும், நிழல் தரும் மரங்கள் எதிர்த்தாற்போல், அடுத்தடுத்து 9.00 மீட்டர் தூரத்திற்கு மேற்படாமல் சாலையின் எல்லையிலிருந்து 1.00 மீட்டருக்கு வளர்க்கப்படவேண்டும்.
9) மனுதாரர் மனைப்பிரிவிற்கு தொடர்புடைய ஆணையாளர், திருப்பூர் மாநகராட்சி அவர்களிடமிருந்து ஒப்புதல் பெற்றுக் கொள்ள வேண்டும். மனைப்பிரிவில் அமையும் மனையில் கட்டிடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டிடத்திற்கும் நகர் ஊரமைப்புத் துறை மற்றும் உள்ளாட்சியிடமிருந்து அனுமதி பெறவேண்டும்.
10) அ) மேற்படி மனைப்பிரிவிற்கு திருப்பூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தால் தொழில்நுட்ப அனுமதி மட்டுமே வழங்கப்பட்டுள்ளது என்பதால் மனைப்பிரிவிற்கான இட உரிமை தொடர்பாக வில்லங்கம் ஏதேனும் இருப்பின் உள்ளாட்சியால் பரிசீலித்து முடிவு எடுக்கப்படவேண்டும்.

    ஆ) மேற்படி மனைப்பிரிவுக்கு உள்ளாட்சியால் அங்கீகாரம் அளிக்கப்படும் போது அங்கீகார நிர்வாக அதிகாரியின் முன்னிலை நடவடிக்கையின் நகலினை இவ்வலுவலகத்திற்கு உடன் அனுப்ப வேண்டும். இதில் பொது திறவிடங்கள் உள்ளாட்சியிடம் ஒப்படைத்ததற்கான சான்றும் இணைக்கப்படவேண்டும்.

11) மனுதாரர், ஆணையாளர், திருப்பூர் மாநகராட்சி அவர்களிடமிருந்து மனைப்பிரிவு வரைப்படத்திற்கு ஒப்புதல் பெற்றவுடன் மனைப்பிரிவு ஒப்புதல் பெற்ற இடத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம் விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6 x 4 அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொது மக்கள் பார்வைக்காகவும், மேலும் மனைப்பிரிவு அங்கீகரித்த மன்றத் தீர்மான எண்ணும் நாளும் தெளிவாக குறிப்பிட்டு நிரந்தரமாக பிரசுரிக்கப்படவேண்டும்.

12) மனுதாரர் சமர்ப்பித்துள்ள நில உரிமை ஆவணங்களின்படி, நில உரிமை குறித்து பரிசீலிக்கப்படுகிறது. எனவே, உண்மையில் நில உரிமம் இல்லாத இடத்திற்கு மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்ட காரணத்திற்காக எந்த உரிமையும் கொண்டாட முடியாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

13) நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில் நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்புத் துறையால் இரத்து செய்யப்படும்.

14) விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு, நகர் ஊரமைப்புத் துறையால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்படவேண்டும்.

15) தள பரப்பு குறியீடு எண். (FSI) TNCDBR 2019 ன்படி அனுமதிக்கலாம்.

16) கோவில், தேவாலயம், மசூதி ஆகியவற்றிற்காக ஒதுக்கப்பட்டிருந்தால், அம்மனைகளை வரைபடத்தில் காட்டியுள்ளது போல் உட்பிரிவு செய்து கொள்ள வேண்டும். மனைகளை அதற்குரிய உபயோகத்திற்கு மட்டுமே பயன்படுத்தவேண்டும்.

17)

அ) தமிழ்நாடு நகர்புற நில உச்சவரம்பு சட்டம் 1978 நடைமுறையில் உள்ள இடத்தில் அமைந்தால் மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்கப்பட்ட விபரத்தினை தொடர்புடைய உச்சவரம்புச் சட்ட அதிகாரிகளுக்கு தெரிவித்தல் வேண்டும்.

ஆ) 1894 ஆம் ஆண்டு நிலம் கையப்படுத்துதல் சட்டப்பிரிவு 4 மற்றும் நில உச்சவரம்பு சட்டம் 1978 மற்றும் நிலச்சீர்த்திருத்தச் சட்டம் 1961 தொடர்பாக மனுதாரர் அளித்த உறுதிமொழியின் பேரில் மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. எனவே, இம்மனைப்பிரிவிற்கான நிலம் மேற்படி சட்டங்களின் நடவடிக்கைகளுக்கு உட்படின், அதற்கு மனுதாரரே பொறுப்பாவார்.

இ) மேலும் மேற்படி சட்டங்களின்படி, நில ஆர்ஜிதம் சம்பந்தமாக நில ஆர்ஜிதப்பட்டியல் (Land Plan Schedule) எதுவும் பரிசீலனைக்குப் பெறப்படவில்லை என்பதை உறுதி செய்து மன நிறைவு அடைந்த பின்னரே, மனைப்பிரிவிற்கு ஆணையாளர், திருப்பூர் மாநகராட்சி அவர்களால் ஒப்புதல் அளித்து அங்கீகாரம் வழங்கும்படி தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

18) உள்ளாட்சி அதிகாரியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் ஒன்றும் நிபந்தனை படிவம் ஒன்றும் சம்பந்தப்பட்ட பதிவுத் துறை அலுவலருக்கு மேல் நடவடிக்கைக்காக அனுப்பி வைக்குமாறு உள்ளாட்சி அதிகாரியை கேட்டுக் கொள்ளப்படுகிறது.

# சிறப்பு நிபந்தனை

1) a) பார்வை 7ல் கண்ட அரசாணை மற்றும் பார்வை 4ல்கண்ட Tamil Nadu combined Development Building Rules 2019 விதி எண்.47(11)ன்படியும் மாநகராட்சி / நகராட்சி பகுதி எனில் "Collecting the necessary fees including the charges for providing amenities like roads, storm water drains and steel lights from the applicants" After Collecting the necessary fees the final layout sketch, permit of Planning Authority along with approval of Local Body shall be issued to the applicant(s) directly.

b) மாநகராட்சி / நகராட்சி அல்லாத பகுதிகளில் "Shall collect the necessary fees and issue the final layout sketch, permit of Planning Authority along with the permit of local body to the applicant lays tar roads, provide other amenities like storm water drains, water supply facilities by constructing required OHT, Provide necessary street lights etc., as per the standards specified by the Local Body".

2) (EWS) பொருளாதாரத்தால் பின் தங்கியவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மனைகள் ஒருங்கிணைக்கவோ மாற்றி அமைக்கவோ கூடாது. ஆனால், கிராமப்புற பகுதிகளில் மனை ஒப்புதல் வழங்கப்பட்ட 3 வருடங்களுக்கு மேலாகியும், EWS மனைகள் விற்க இயலாத நிலை இருப்பின் அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 31.01.2020ன் ஒருங்கிணைப்பு செய்ய விண்ணப்பித்து உரிய அனுமதி பெறப்படவேண்டும்.

3) பார்வை 8 மற்றும் 9ல் கண்ட அரசு கடிதம் மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி, உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய் ஆவணங்களின் உள்ளாட்சியின் பெயரில் உரிமை மாற்றம் செய்து வருவாய் ஆவணங்களில் சர்வே எண் உட்பிரிவு செய்யப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்படவேண்டும்.

4) "The Tamil Nadu Government in G.O.Ms.No.112, Housing and Urban Development Department date: 22/06/2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development) Act 2016. The Promoter has to advertise, market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot. Apartment or building, as the case may be, in any real estate project or part of it only after registering the real estate project with the real estate regulatory Authority.

## அங்கீகரிக்கப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு ம.வ./ந.ஊ.(தி.மா)/திஉ.திகு எண்.20/2023–ன் ஒதுக்கீடு விபரம்

திருப்பூர் மாவட்டம், திருப்பூர் உள்ளூர் திட்டக்குழுமம், திருப்பூர் தெற்கு வட்டம், வார்டு எண்.47, நல்லூர் கிராமம், க.ச.எண். 506/1A2Aல் 2.35 ஏக்கர் (அ) 9517.00 ச.மீ. நிலப்பரப்பில்,

| | | பரப்பளவு | விழுக்காடு |
|---|---|---|---|
| மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு | : | 2.35 ஏக்கர் (அ) 9517.00 ச.மீ | |
| ஒதுக்கிய மனைகள் | : | 39 மனைகள் | |
| பொது ஒதுக்கீடு<br>மனுதாரரால் உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை. | | | |
| உத்தேச மனைப்பிரிவு சாலைகள் பரப்பு | : | 2842.45 ச.மீ | |
| உள்ளாட்சிக்கான பொது உபயோகம் பரப்பு | : | 38.58 ச.மீ | 0.59% |
| பூங்கா | : | 644.37 ச.மீ | |
| மின்பகிர்மானத்திற்கு பொது உபயோக பரப்பு (TANGEDCO) | : | 50.675 ச.மீ | 0.78% |
| | | | |

8/5/24

ஆணையாளர்,
திருப்பூர் மாநகராட்சி.

16.4.24




Document certified by Pushparaj B.

Signed by: Assistant Director
Location: Tiruppur
Date: 2023.03.27 18:37:19

வேபிரேம்குமார்
திட்ட உதவியாளர்

# நகர் ஊரமைப்பு துறை (DTCP)
## மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் திருப்பூர் மாவட்டம்
## திருப்பூர் உள்ளூர் திட்டக்குழுமம்

திருப்பூர் மாவட்டம், திருப்பூர் தெற்கு வட்டம், திருப்பூர் மாநகராட்சி, நல்லூர் கிராமம் க.ச.எண் .506/1A2A -ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம் .

அளவு 1:500 (1செ.மீ =500மீ ) ( விரிவு அபிவிருத்தி திட்டம் எண் . 15 )

இணையதள விண்ணப்ப எண் . 6RII3N6Z

குறிப்பு :

| | |
|---|---|
| மனைப்பிரிவின் பரப்பு | : 2.35 ஏக்கர் (அ) 9517.00 ச.மீ |
| ஒதுக்கிய மனைகள் | : 39 |

வ

மனைப்பிரிவின் எல்லை ..........

நிலையிலுள்ள சாலை / அணுகு சாலை ..........

மனைப்பிரிவு சாலை ..........

பொது ஒதுக்கீடுகள் (உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை ):

I. மனைப்பிரிவு சாலை பரப்பு (ம) மூலை முடக்கு : 2842.425 ச.மீ
 திட்ட சாலை விஸ்தரிப்பு : 231.15 ச.மீ
 மொத்த சாலை பரப்பு : 3073.575 ச.மீ

II. பூங்கா
 i) ஒதுக்கப்பட வேண்டிய பூங்கா பரப்பு : (மனைப்பிரிவின் பரப்பு - மனைப்பிரிவு சாலை பரப்பு ) x10%
 : (9517.00 - 3073.575) x 10% = 644.34 ச.மீ
 ii) 644.34 ச.மீ (10%) பூங்கா பரப்பிற்கு ஈடான அரசு வழிகாட்டி மதிப்பு தொகைரூ. 631512/-னை 21.03.2023 அன்று உரிய அரசு கணக்கு தலைப்பில் செலுத்தியுள்ளார்

III. பொது உபயோகம் (மனைப்பிரிவின் மொத்தப்பரப்பில் சாலை பரப்பு நீங்கலாக 1%)
 A) LOCALBODY -க்கு ஒதுக்கப்பட வேண்டிய பரப்பு : (9517.00 - 3073.575) x 0.5% = 32.21 ச.மீ .
 ஒப்படைக்கப்பட்ட பரப்பு : 38.58 ச.மீ (0.59%)
 B) TANGEDCO -க்கு ஒதுக்கப்பட வேண்டிய பரப்பு : (9517.00 - 3073.575) x 0.5% = 32.21 ச.மீ
 ஒப்படைக்கப்பட்ட பரப்பு : 50.675 ச.மீ (0.78%)

மூலை முடக்கு : 12.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.5மீ x 1.5மீ -ம் விடப்படல் வேண்டும் .
 12.0மீ மேல் உள்ள சாலைகளுக்கு 4.5மீ x 4.5மீ -ம் விடப்படல் வேண்டும் .

நிபந்தனைகள் :

1. அரசாணை எண் : 18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை (MA-1) நாள் .04.02.2019 மற்றும் அரசாணை எண் : 16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை (MA-1) நாள் .31.01.2020-ன் படி நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும் .
2. அரசாணை எண் : 181 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள் .09.12.2020-ல் மற்றும் அரசாணை எண் .141, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள் .16.07.2022-ல் தெரிவித்துள்ளவாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட பின்னரே இறுதி ஒப்புதல் வழங்கப்படல் வேண்டும் .
3. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும்முன் இடத்தினை எந்தத்துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும் , எந்தத்துறையாலும் நிலஆர்ஜித பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும் ஆணையாளர் , திருப்பூர் மாநகராட்சி அவர்கள் உறுதி செய்து கொள்ளவேண்டும் .
4. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என்று அரியப்பட்டாலோ அல்லது மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு இயக்குநர் , சென்னை அவர்களால் ரத்து செய்யப்படும் .
5. விற்பனைக்குண்டான மனைகள் விற்பனை செய்யும் போது இவ்வரைபட நகலோடு நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஆணையின் நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும் .
6. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்த வித மாற்றம் விடுதலின்றி மனைப்பிரிவு விடுதலின்றி நுழைவாயிலில் 6' x 4' அளவிலான நிரந்திர தகவல்பலகை மூலம் பொது மக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும் .
7. உத்தேச மனைப்பிரிவு சாலைகள் தார் சாலைகளாக அமைக்கப்பட்ட பின்னர் உத்தேச மனைப்பிரிவு சாலைகளின் தரம் குறித்து உள்ளாட்சி பொறியாளரிடமிருந்து தகுதிச்சான்று பெற்றுக்கொள்ளப்பட வேண்டும் .

SWP / DTCP / TIRUPPUR LPA / LAYOUT NO: 20/2023
PLANNING PERMISSION NO: 20/2023

உறுப்பினர் செயலர் / நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் ,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் ,
திருப்பூர் மாவட்டம் .